பெரம்பலூர் நகராட்சி

**2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் –27 ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00**

**மணிக்கு பெரம்பலூர் நகர்மன்றத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள்:- 01** நகராட்சியின் நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சியில் நூலகம்/ அறிவு சார் மையத்திற்கு நூலக கவனிப்பாளராக (CareTaker) பணியாளர்களை நியமனம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தினால் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, அதற்கான விளம்பரக்கட்டணமாக இந்நகராட்சி சார்பாக ரூ. 19,000/-மட்டும் செலுத்தக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2248/2023/இ1. நாள்.20.15.2024-ன் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி விளம்பர கட்டணம் ரூ.19,000/- நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 5123/2021/î1** | தீர்மான எண்.653<br><br>அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள்:- 02** இந்நகராட்சியில் 2021 – 2022 ஆண்டின் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நூலகம் / அறிவுசார் மையம் கட்டப்பட்டு 05.01.2024 ல் திறப்பு விழா செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி அறிவுசார் மையத்திற்கு நகராட்சிகிளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நூலக கவனிப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். எனவே இப்பணியாளருக்கான ஊதியத்தினை Fusion manpower and Infra services Trichy, என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கிட நகராட்சிகிளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2248/2023/இ1 நாள்.03.01.2024 ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நூலக கவனிப்பாளருக்கு ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 முடிய ஊதியம் வழங்குவதற்கான தோரயமாக செலவினம் ரூ. 3.00 இலட்சம் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.<br>**5123/2021/இ1** | தீர்மான எண்.654<br><br>அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள்:- 03** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில் கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 246/2020 நாள் 07.01.2020 ல் VB Associates Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 06.01.2023-ல் முடிய **3** ஆண்டுகளுக்கு பாரமரிப்பு பணிகள் முடிவடைந்துவிட்டதை தொடர்ந்து பின்னர் ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 07.01.2024 முதல் **6** மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலம் 06.07.2024 ல் முடிவடைவதால் மேலும் **6** மாத காலத்திற்கு 07.07.2024 முதல் நீட்டிப்பு செய்யதுதர கோரியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து V.B Associates, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கும் இப்பணிக்கான செலவினம் . ரூ. 55.60 இலட்சம் மட்டும் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு :**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**2.** பணியின் அவசியம் கருதி 07.07.2024 முதல் ஆறுமாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**3.** VB Associates Chennai என்ற நிறுவனம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதால் **6** மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 0057 /2020/ இ1** | தீர்மான எண். **655** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள்:- 04** பெரம்பலூர் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வரும் நிலையில் விடுபட்ட மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.**404/2020** நாள்.29.10.2020-š VB Associates Chennai என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு 06.01.2023-ல் 3 ஆண்டுகளுக்கு பாரமரிப்பு பணிகள் முடிவடைந்துவிட்டதை தொடர்ந்து பின்னர் ஒவ்வொரு ஆறுமாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 07.01.2024 முதல் **6** மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலம் 06.07.2024 ல் முடிவடைவதால், மேலும் **6** மாத காலத்திற்க்கு 07.07.2024 முதல் நீட்டிப்பு செய்து தர கோரியும் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து V.B Associates Chennai என்ற நிறுவனத்தின் மூலம் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கும் இப்பணிக்கான செலவினம் ரூ.**14.60** மட்டும் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** பணியின் அவசியம் கருதி 07.07.2024 முதல் ஆறுமாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். **656** அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 3. V.B Associates Chennai என்ற நிறுவனம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் மற்றும் அனைத்து நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளதால் **6** மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 9054/2017/ இ1** | |
| **27.06.2024** | **பொருள்:- 05** இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிக்கு **38** பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதி காலம் 31.05.2024 –ல் முடிவடைய உள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்கி வரும் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக மேலும் ஆறு<br><br>மாதங்களுக்கு மேற்படி ஒப்பந்த நிறுவனத்தினால் பணியாளர்களை வழங்கிட விருப்பம் இருப்பின் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை வழங்கிட சம்மதக் கடிதத்தினை சமர்ப்பிக்கமாறு தெரிவித்து 20.05.2024–ல் ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது .<br>மேற்படி ஒப்பந்ததாரரின் 27.05.2024–ம் தேதிய கடிதத்தில் மேலும் ஆறு மாதங்களுக்கு பணியாளர்களை வழங்கிடவும் ஏற்கனவே வழங்கப்பட்ட அதே விலை விகிதம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கிட சம்மதம் தெரிவித்து ஒப்பந்ததாரர் திருமதி எஸ். ஜெயந்தி என்பவர் கடிதம் சமர்பித்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து குடிநீர் விநியோக பணிக்கு **38** பணியாளர்களை 01.06.2024 முதல் பெறுவதற்கு அனுமதி மற்றும் இதற்கான தோராய செலவினம் ரூ. **42.00** இலட்சத்திற்கும் இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது குடிநீர் திட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதியும் மேற்படி பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பெற்று ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண். 3366/2023/ இ1** | தீர்மான எண். **657** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 06 :** பெரம்பலூர் நகராட்சியில் பணிபுரியும் அலுவலக பணியாளர்கள் அலுவலக வேலை நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கு நடப்பு ஆண்டுக்கான (2024-2025) உத்தேச பயணப்படி ரூ. **2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1461/2024/ ஆ2** | தீர்மான எண். **658** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | பொருள் **07 :** இந்நகராட்சியில் **01.04.2018** முதல் **01.09.2022** வரையுள்ள | தீர்மான எண். **659** |

<table>
<tr>
<td></td>
<td>காலங்களுக்கு சேவை வரி கட்டணம் அதற்கான உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு சேவை வரி அலுவலகம் (GST) திருச்சி அலுவலகத்திற்கு கணக்கினை தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு இந்நகராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட கணக்கினை ஆய்வு செய்த சேவை வரி அலுவலகம் நகராட்சியால் செலுத்தப்பட்ட தொகைகள் காலதாதமதமாக செலுத்தி அதற்கான படிவம் உரிய காலகெடுவுக்குள் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்து அதற்காக வட்டி மற்றும் அபராதம் தொகை ரூ.1,75,20,826/-ஐ செலுத்த கோரி சேவை வரி அலுவலக உத்தரவு எண்.04/2023 நாள்.24.08.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
அவ்வாறு சேவை வரி அலுவலகத்தால் அளிக்கப்பட்ட உத்தரவினை ஆலயம் அசோசியேட்ஸ், திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் ஆய்வு செய்து அதன் மீது மேல்முறையீடு எண்.AD330324116765A/2024 (GST) ல் 27.03.204 அன்று மத்திய சேவை வரி அலுவலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>
எனவே, இந்நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்வதற்கான கட்டணம் மற்றும் தணிக்கையாளர் கட்டணம் ஆகியவைக்கான செலவினம் ரூ.1,45,000/– ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)ஆலயம் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு தொகையினை அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலககுறிப்பு:<br>
அனுமதிக்கலாம் ந.க.எண்.4711/2023/பி1</td>
<td>அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>பொருள் 08 : பெரம்பலூர் நகராட்சி 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு விவரங்களை தணிக்கை செய்திட ஏர்.ஆர்.திருவேங்கடம், தனியார் நிதி ஆலோசகர் மூலம் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
<table>
<tr><th>S.No</th><th>Description</th></tr>
<tr><td>1</td><td>Preparation, Conversion, and Rectification of Data Entry Work for Journal Book & General Ledger for the Annual Account for the Year 2022-2023</td></tr>
<tr><td>2</td><td>Preparation of Trail Balance, Balance sheet Data Entry and Printout Charges for Period of 2022-2023</td></tr>
</table>
எனவே, மேற்கண்ட பணிகளை UTIS ல் பதிவேற்றம் செய்து 2022–2023–ம் நிதியாண்டு கணக்கினை முடித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000.00 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 2081/2024/பி1</td>
<td>தீர்மான எண்.660 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>பொருள் 9 : பெரம்பலூர் நகராட்சி 2023–2024 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு விவரங்களை தணிக்கை செய்திட எம்.ஆர்த்தி தனியார் நிதி ஆலோசகர் மூலம் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
<table>
<tr><th>S.No</th><th>Description</th></tr>
<tr><td>1</td><td>Preparation, Conversion, and Rectification of Data Entry Work for Journal Book & General Ledger for the Annual Account for the Year 2023-2024</td></tr>
<tr><td>2</td><td>Preparation of Trail Balance, Balance sheet Data Entry and Printout Charges for Period of 2023-2024</td></tr>
</table>
எனவே, மேற்கண்ட பணிகளை UTIS ல் பதிவேற்றம் செய்து 2023–2024–ம் நிதியாண்டு கணக்கினை முடித்து உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பி</td>
<td>தீர்மான எண்.661 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | வைத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000.00 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண். **2081/2024**/பி1 | |
| **27.06.2024** | **பொருள் 10:** துணை இயக்குநர் சுகாதாரபணிகள், பெரம்பலூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3072/அ4/2019, நாள்.11.08.2023-ம் தேதிய கடிதத்தின் மூலம் பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு, சிக்கன்குனியா நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழு ஒழிப்பு பணி, புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் கிருமிநாசினிகள் தெளிப்பதற்கும் வார்டுக்கு 2 களப்பணியாளர்கள் வீதம் 42 களப்பணியாளர்களை தற்காலிகமாக நியமித்து கொசுப்புழுக்களின் அடர்த்தி மற்றும் காய்ச்சல் ஆகியவற்றை தொடர் கண்காணிப்பு செய்து கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இந்நகர் மன்ற தீர்மான எண். 636 நாள்.11.03.2024-ன்படி கோட்டம் எண். 1க்கு **21** களப்பணியாளர்கள், கோட்டம் எண். 2க்கு **21** களப்பணியாளர்கள் ஆக கூடுதல் **42** களப்பணியாளர்களை **5** மாதத்திற்கு வழங்கிட அனுமதிக்கப்பட்டு மேற்படி டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்காக பெறப்பட்ட அனுமதி காலம் 30.06.2024-ல் முடிவடைவதால் மாவட்ட ஆட்சித் தலைவர், பெரம்பலூர் அவர்களின் ந.க.எண்.889/அ2/2024, நாள்.31.05.2024-ம் தேதிய கடிதத்தில் தென்மேற்கு பருவ மழையினாலும் தற்போது கோடை மழை பெய்து வருவதாலும், அதிகப்படியாக தேக்கமாகும் மழை நீரால் டெங்கு, மலேரியா மற்றும் சிக்கன்குனியா நோய்கள் பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் அபாயம் உள்ளளாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாக டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் ஏடிஸ் கொசுக்கள் தண்ணீரில் உற்பத்தியாகி பொது சுகாதாரத்திற்கு பெரும் இன்னலை ஏற்படுத்தும் என்பதால் அதனால் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்கும் பணியில் ஈடுபட வேண்டும் எனவும், பெரம்பலூர் மாவட்டத்தில் கொசுக்கள் மூலம் ஏற்படும் டெங்கு காய்ச்சல் உள்ளிட்ட நோய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளதால் பெரம்பலூர் நகராட்சி பகுதியில் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **01.07.2024** முதல் மேலும் **5** மாதங்களுக்கு நீட்டிப்பு செய்யவும் இப்பணியின் அவசர அவசியம் கருதி 42 களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்கிட சம்மதம் தெரிவித்து எஸ்.ஜெயந்தி ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது மேற்படி ஒப்பந்ததாரர் 14.04.2024–ம் தேதிய கடிதத்தில் 42 களப்பணியாளர்களை 150 நாட்களுக்கு பழைய விலை விகிதம் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து ஒப்புதல் கடிதம் **04.06.2024**ல் கொடுத்துள்ளார். எனவே, (42X150 = 6300 X 587 = 3698100/-) தோராயமாக ரூ.3800000/- (ரூபாய் முப்பத்தி எட்டு இலட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணி நீட்டிப்பு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்.5177/2022/எச்1 | தீர்மான எண். **662** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 11 :** பெரம்பலூர் நகராட்சியில் உள்ள பொதுகழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களுக்கு தேவையான பொருட்கள் சப்ளை செய்யவதற்கு **23.08.2023**அன்று மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி கோரப்பட்டது. | தீர்மான எண். **663** அனுமதிக் கப்பட்டது |

மேற்படி பணிக்கு கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பொருள் விபரம் | எண்ணிக்கை / கிலோ | S.JAYANTHI , NO.497, Attur Main Road, Perambalur -621212 | Kannan, Contractor, M.G. puram, Perambalur | Tamilnadu Water supplys & Drainage System |
|---|---|---|---|---|---|
| 1 | Banner | 33 எண்ணிக்கை | 24750 | 27060 | 27555 |
| 2 | Bucket Big | 20 எண்ணிக்கை | 6700 | 6800 | 7000 |
| 3 | Bucket Small | 28 எண்ணிக்கை | 5460 | 6300 | 7140 |
| 4 | Mug | 48 எண்ணிக்கை | 1920 | 2880 | 3840 |
| 5 | Towel rod with fitting include labour | 13 எண்ணிக்கை | 2990 | 3315 | 3445 |
| 6 | Wash Basin With Fitting Include labour | 8 எண்ணிக்கை | 15600 | 15800 | 15840 |
| 7 | Hand Towel | 70 எண்ணிக்கை | 3150 | 4550 | 5250 |
| 8 | Soap | 70 எண்ணிக்கை | 3360 | 3640 | 4550 |
| 9 | Odonil | 70 எண்ணிக்கை | 5600 | 5950 | 6300 |
| 10 | LED Lamp set | 11 எண்ணிக்கை | 3080 | 3190 | 3245 |
| 11 | Napthalin ball | 10 கிலோ | 1900 | 2100 | 2150 |
| 12 | Napkin | 20 பாக்கெட் | 1200 | 1600 | 1700 |
| 13 | LED Tubelight | 42 எண்ணிக்கை | 4200 | 6300 | 7350 |
| | | | **79910** | **89485** | **95365** |

மேற்கண்ட பணிக்கு **28.08.2023** பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** உள்ள S.JAYANTH, NO.497, Attur Main Road, Perambalur என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு:-<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>27.06.2024</td><td>பொருள் 12 : பெரம்பலூர் நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு புல்வெட்டும் இயந்திரங்கள் வாங்க 26.08.2023அன்று மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>பணியின் விபரம் (வரிகள் உட்பட)</th><th>எண் ணிக்கை</th><th>NEW SALEM MACHINERYS MART , PERAMBALUR -621212</th></tr>
<tr><td>Bag Type machine 2 storek (Indico</td><td>1</td><td>15700.00</td></tr>
<tr><td>Side Tyre Machine (2 stock star kut)</td><td>1</td><td>12150.00</td></tr>
<tr><td></td><td></td><td>27850.00</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு 28.12.2023 பெறப்பட்ட முன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 உள்ள NEW SALEM MACHINERYS MART , PERAMBALUR-621212 என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:-<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண். 664 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>27.06.2024</td><td>பொருள் 13 : இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு சாலை வரி, பசுமை வரி மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ஆகியவை 2024-2025-ம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலர், பெரம்பலூர் அவர்களுக்கு செலுத்துவதற்கும் மேலும் வாகனகாப்பீட்டு பிரிமியமும் (Insurance) செலுத்தப்படவேண்டியுள்ளது. எனவே மேற்கண்டுள்ளவாறு கட்டணங்கள் செலுத்துவதற்கு தோராயமாக ரூ. 10,00,000/– (பத்து இலட்சம்) மட்டும் செலவினம் ஏற்படும் என்பதால் மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம்அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண். 665 அனுமதிக் கப்பட்டது</td></tr>
<tr><td>27.06.2024</td><td>பொருள் 14 : பெரம்பலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மூலம் தினசரி சேகரம் செய்து வைக்கப்பட்டுள்ள MCC 1, MCC 2, சுமார் 2ஆயிரம் டன் அளவிலான மறுசுழற்சிக்கு பயன்பாடாத நெகிழி கழிவுகளை அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு தனியார் லாரிகள் மூலம் எடுத்துச்செல்லவும், நெகழி கழிவுகளை JCB மூலம் தனியார் லாரிகளில் ஏற்றவும், நகராட்சி வாகனங்களில் ஏற்றவும், கீழ்கண்டவாறு விலைப்புள்ளி பெறப்பட்டது.</td><td>தீர்மான எண். 666 அனுமதிக் கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>G. கண்ணன், ஒப்பந்ததாரர், M.G. புரம், பெரம்பலூர்</th><th>K. காமாராஜ், ஒப்பந்தகாரர், பெரம்பலூர்</th><th>K. ராஜா, ஒப்பந்தக்காரர், வெங்கடேச புரம், பெரம்பலூர்</th></tr>
<tr><td>1</td><td>பொது சுகாதாரப்பிரிவின் மூலம் தினசரி சேகரம் செய்துவைக்கப்பட்டுள்ள மறுசுழற்சிக்கு பயன்பாடாத நெகிழி கழிவுகளை அரியலூர் டால்மியா சிமெண்ட் ஆலைக்கு நெகிழி கழிவுகளை துஊக்ஷ இயந்திரம் கொண்டு லாரிகள் ஏற்றுவதற்கு அப்புறப்படுத்தும் பணிகள் (Rate Per Hour)</td><td>1000,</td><td>1100,</td><td>1100,</td></tr>
<tr><td>2</td><td>பொது சுகாதாரப்பிரிவின் மூலம் தினசரி சேகரம் செய்துவைக்கப்பட்டுள்ள மறுசுழற்சிக்கு பயன்பாடாத நெகிழி கழிவுகளை லாரி மூலம் அரியலூர் டால்மியா சிமெண்ட் ஆலைக்கு எடுத்துச்செல்வதற்கு காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை இயந்திரம் கொண்டு அப்புறப்படுத்தும் பணிகள்</td><td>9900</td><td>9950</td><td>10100</td></tr>
</table>
மேற்கண்ட பணிக்கு 05.01.2024 பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 உள்ள திரு. G. கண்ணன், ஒப்பந்ததாரர், பெரம்பலூர் என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக்குறிப்பு:-<br>மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>
பொருள்:- 15 இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் இலகுரக /கனரக வாகனங்களுக்கு 2024 - 2025 ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் 3 எண்ணிக்கை ( TN 46 T 7617 , TN 46 T 3929, TN 46 AB 9292) குடிநீர் டேங்கர் லாரி –2 (TN 46 J 7292 TN46 K 0021 ) மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பழுது பணி ஏணி வாகனம் TN46 P 8533 மற்றும் பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் வாகனம் TN46 Q 8712 ஆகிய ஏழு எண்ணிக்கை வாகனங்களுக்கு வாகனங்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு :
1. மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 2518/2023/இ1
</td>
<td>தீர்மான எண். 667 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 16 :** பெரம்பலூர் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பெறப்படும் குடிநீரின் அளவினை அளவீடு செய்வதற்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பொருத்தப்பட்ட அளவுமானியின் மூலம் அளவீடுகள் செய்யப்பட்டுவருகிறது. மேற்கண்ட அளவுமானியில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதாலும் அளவீடுகள் சரிவர அளவீடு செய்யாமல் உள்ளது எனவும் பலமுறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டும் அளவுமானி சரி செய்யப்படாமல் உள்ளது. எனவே, அளவுமானியை புதியதாக நகராட்சி மூலம் வாங்கி பொருத்த துல்லியமாக அளவீடுகள் செய்வதற்கு அளவுமானி வாங்குவதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2249 /2024 /E1** | தீர்மான எண். **668** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 17 :** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான ஆத்தூர் ரோடு மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள நுண்ணுயிர் உரம் செயலாக்க மையத்தில் உள்ள குப்பை அரைக்கும் இயந்திரத்தில் (Shredder) உள்ள மோட்டார் பழுதடைந்ததை சரி செய்யவும் அதன் Belt மற்றும் உள்ளே உள்ள வலையினை சரிசெய்யவும், அதன் Starter, மற்றும் Shutter பழுதுகளை சரிசெய்வதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம்அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2250 /2024 /E1** | தீர்மான எண்.**669** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 18:** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**9**-ல் வாசுகி தெரு மற்றும் வார்டு எண்.**19**-ல் பாட்டப்பன் கோவில் தெரு பகுதிகளில் மழைநீர் செல்லும் கால்வாய்கள் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆகியுள்ள நிலையில் அதன் பக்க சுவர்கள் பழுதுடைந்துள்ளது. இதன் காரணமாக மழைநீர் சாலைகளில் தேங்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, அதனை சரி செய்ய பக்க சுவர்களை உயர்த்தி அமைக்கவும், பழுதடைந்த சுவர்களை புதுப்பிக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 8.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2252 /2024 /E1** | தீர்மான எண். **670** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 19 :** பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் மின் இணைப்பு துண்டிப்பு ஆகும் நேரங்களில் உபயோகப்படுத்தப்படும் 40 KVA GENSET-ல் பழுதுகள் ஏற்பட்டு இயங்க இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, அதனை சரிசெய்ய உத்தேச செலவின தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2253 /2024 /E1** | தீர்மான எண். **671** அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 20 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **1** முதல் **21** வரையுள்ள தற்பொழுது புதியதாக தார்சாலை அமைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாதாளசாக்கடை திட்டத்தின் கழிவுநீர் குழாயின் ஆள் இறங்கும் தொட்டியின் மட்டம் (Manhole) தரைமட்டத்தை விட குறைவாக உள்ளதையடுத்து பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி தாழ்வாக உள்ள ஆள் இறங்கும் தொட்டியினை (Manhole) தரைமட்டத்திற்கு உயர்த்தி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**4.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.**2255 /2024 /E1** | தீர்மான எண். 672 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 21 :** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகம் அருகே உள்ள அம்மா உணவகத்தில் உள்ள மின் விசிறிகள் மற்றும் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. எனவே, அதனை பழுது நீக்கம் செய்யவும் புதியதாக மின்விசிறிகள் மற்றும் மின்விளக்குகள் வசதிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 60,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **2256 /2024 /E1** | தீர்மான எண். 673 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 22 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 135 ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் பொருத்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பொதுமக்கள் நலன் கருதி உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**4.90** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **2257 /2024 /E1** | தீர்மான எண். 674 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 23 :** பெரம்பலூர் நகராட்சி பகுதிகளில் **35** ஆழ்குழாய் கை பம்ப் கிணறுகள் உள்ளன. மேற்கண்ட ஆழ்குழாய் கிணறுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **2258 /2024 /E1** | தீர்மான எண். 675 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 24 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 ல் TELC பள்ளி தெற்கு புறம் உள்ள வீதியில் உள்ள தெருவில் உள்ள பைப்லைனில் 70க்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேற்கண்ட பகுதியில் குடிநீர் சரவர கிடைக்கவில்லை அந்த தெருவில் கூடுதலாக PVC பைப்லைன் அமைக்கவும் மேலும், வார்டு எண் 9 ல் E.B. ஆபிஸ் பின்புறம் உள்ள தெருவில் 4 ரோட்டில் இருந்து வரும் பைப்லைன் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சரிசெய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.80 இலட்சத்திற்கு அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2292 /2024/இ1** | தீர்மான எண். 676 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 25 :** பெரம்பலூர் நகராட்சியில் அலுவலக வளாக கட்டிடத்தில் சோலார் தகடுகள் பொருத்தி மின்சாரம் தயாரிக்கவும், உபயோகப்படுத்தவும் பணி செய்யப்பட்டுள்ளது. இதில் பழுதுகள் ஏற்பட்டு மின்சாரம் தயாரிக்க இயலாமல் உள்ளது.<br>தற்சமயம் இக்கட்டமைப்பிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரத்தை அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தவும், உபரியான மின்சாரத்தை மின் வாரியத்திற்கு அனுப்பும் வசதிக்காக By – Directional Meter பொருத்தி (Battery இல்லாமல்) அதன் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்து மின் கட்டணத்தை வெகுவாக குறைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3,75,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2240/2024 /E1** | தீர்மான எண். 677 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 26 :** பெரம்பலூர் நகராட்சியில் K.N.M.T. திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு திட்டப்பிரேரனைகள் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இத்திட்டங்களுக்கு தேவையான AUTOCAD DRAWING, STRUCTURAL DESIGN, 3D DRAWING மழைநீர் வடிகால் பணி செய்ய CATCHMENT AREA, RAINFALL RUN OFF QUANTITY, DRAIN VENT SIZE ஆகிய தொழில் நுட்ப கணக்கீடுகள் செய்யவும், கணினியில் வரைந்து கொடுக்கவும் தனியார் தொழில் நுட்ப வல்லுனர்களிடம் அணுகி பணிமேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், வரும் காலங்களில் தயாரிக்கப்பட உள்ள திட்டங்களுக்கு தொழில் நுட்ப கணக்கீடுகள் செய்யவும் வேண்டியுள்ளது. மேலும், பெரிய அளவில் வண்ண பிரிண்ட் எடுக்கவும், புகைப்படங்கள் எடுத்து PRINT செய்து பிரோணையுடன் இணைக்கவும் வேண்டியுள்ளது.<br><br>இதுபோன்ற பணிகள் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ. 5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2243 /2024 /E1** | தீர்மான எண். 678 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 27.06.2024 | **பொருள் 27 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9-ல் உள்ள துறைமங்கலம் தரைமட்ட தொட்டியில் உட்புற சுவர்கள் பழுதடைந்துள்ளது. மேலும், அதன் மேல்மூடி மாற்றம் செய்யப்பட்டு சுத்தம் செய்து வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 2,00,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2244/2024 /E1** | தீர்மான எண். 679 அனுமதிக் கப்பட்டது |
| 27.06.2024 | **பொருள் 28 :** இந்நகராட்சியின் 15 வது வார்டு அண்ணா நகர் பகுதியிலிருந்து துறையூர் பிரதான சாலைக்கு பொதுப்பணித்துறை பெரிய ஏரி வாய்க்கால் குறுக்கே ஏற்கனவே கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்த சுமார் 5 அடி அகலம் கொண்ட பாலம் வலுவிழந்து காணப்படுகிறது. எனவே, அப்பாலத்தின் அருகில் புதிய சுமார் 7.00 மீட்டர் அகலம் கொண்ட போக்குவரத்திற்கு பயன்படும் வகையில் பெரிய ஏரியிலிருந்து தண்ணீர் வெளியேறும் பொதுப்பணித்துறை வாய்க்கால் குறுக்கே பாலம் அமைக்க மதிப்பீடு ரூ.116.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெற பிரோனை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை. அவர்களுக்கு அனுப்பப்பட்டது.<br>இப்பணிக்கு தற்சமயம் நிர்வாக அனுமதி ரூ.94.00 இலட்சத்திற்கு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, தொழில் நுட்ப அனுமதி பெற மண்பரிசோதனை செய்தல் மற்றும் வடிவமைப்பு பெற தொழில் நுட்ப கலந்தாலோசகர் நிர்ணயம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ. 94000/. -க்கு மன்றத்தின் அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 2245/2024 /E1** | தீர்மான எண். 680 அனுமதிக் கப்பட்டது |
| 27.06.2024 | **பொருள் 29 :** பெரம்பலூர் நகராட்சி வார்டு எண் -13 பாலாஜிநகர் இரண்டாவது தெருவில் சிமெண்ட் சாலை சுமார் 15 மீட்டருக்கு பழுதடைந்து உள்ளது அரணாரை பகுதியில் மாரியம்மன் கோவில் அருகில் திருவள்ளுவர் தெருவில் சுமார் 4.00 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை பழுதடைந்து உள்ளது. பாலாஜிநகர் பகுதியில் முதல் தெருவில் சுமார் 2.00 மீட்டர் நீளத்திற்கு சிறுபாலத்தின் ஒரு பகுதி பழுதடைந்து உள்ளது. இம்மூன்று பணிகளையும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2,50,000/- அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.2200 /2024 /E1** | தீர்மான எண். 681 அனுமதிக் கப்பட்டது |
| 27.06.2024 | **பொருள் 30 :** பெரம்பலூர் நகராட்சியில் உள்ள திறந்த வெளி கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் சப்ளை செய்யப்பட்டு இறக்கம் செய்யப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் அனைத்து மின் மோட்டார்களிலும் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் அதனை உடனுக்குடன் சரி செய்து இறக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும், தற்போது கோடைகாலமாக உள்ளதால் அதனை பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளும் போது குடிநீர் விநியோகம் வழங்கும் பொருட்டு 5 எண்ணிக்கை 15 HP(Stand by) மின் மோட்டார்கள் வாங்கி இருப்பு வைத்துக்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். 682 அனுமதிக் கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2201/2024இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>பொருள் 31 : பெரம்பலூர் நகராட்சிக்கு பணிகள் செய்ய வழங்கப்படும் அரசு நிதி ஒதுக்கீடு திட்டங்கள் மற்றும் தேவைப்படும் அத்தியாவசிய திட்டப்பணிகளுக்கு தொழில் நுட்ப ரீதியாக ஆய்வுப்பணிகள் மேற்கொள்ள உதாரணமாக மண் தாங்கும் திறன், இரும்பு கம்பி வடிவமைப்பு சரி பார்த்தல், இதர பரிசோதனைகள் செய்ய வேண்டிய பணிகளுக்கு அரசாங்க கல்லூரியான அண்ணா பல்கலைக்கழகம் அரியலூர் கல்லூரிகளில் பணம் செலுத்த வேண்டியுள்ளது.<br>இனி வரும் காலங்களில் தாமதமின்றி மேற்படி ஆய்வுப் பணிகளை செய்ய அரசு கல்லூரிக்கு பணம் செலுத்த செலவின தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1514/2024/இ1</td>
<td>தீர்மான எண். 683 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>பொருள் 32 : இந்நகராட்சியின் 2023- 2024 -ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>அலுவலகக்குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 684 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27.06.2024</td>
<td>பொருள்33 : பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் மருத்துவமனையிலும், பொது இடங்களிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை ஆகிய நிகழ்வுகளை கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மார்ச் 2024 முதல் மே 2024 வரை கீழ்கண்ட விபரப்படி கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th rowspan="2">வ.எ ண்</th><th rowspan="2">பிறப்பு மற்றும் இறப்பு விபரம்</th><th colspan="3">மார்ச் 2024 முதல் மே 2024 வரை</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>பிறப்பு</td><td>239</td><td>212</td><td>451</td></tr>
<tr><td>2</td><td>இறப்பு</td><td>55</td><td>36</td><td>91</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>294</td><td>248</td><td>542</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண். 6080/2023/ எச்1</td>
<td>தீர்மான எண். 685 அனுமதிக் கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 34 :** இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அலுவலக பயன்பாட்டிற்கு ஆணையாளர், பொறியாளர், துப்புரவு அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பணியிடம் உள்ள நிலையில் தற்சமயம் இரண்டு இலகுரக ஈப்பு வாகனங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இவ்வாகனங்கள் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது.<br><br>இந்நகராட்சியில் துப்புரவு அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலரின் அலுவலக பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனங்கள் இல்லாத நிலையில் ஆணையாளரின் வாகனத்தினை பயன்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, தற்சமயம் ஆணையாளர் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தினை துப்புரவு அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பயன்பாட்டிற்கு வழங்கப்பட வேண்டியுள்ளது.<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 35599/2023/எம்.ஏ–1, நாள். 23.02.2024. கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்வு நிலை நகராட்சி அந்தஸ்த்திற்கு (GRADE) ஏற்றவாறு ஈப்பு வாகனங்கள் நான்கு எண்ணிக்கை (2-ஸ்கார்பியோ 2- பொலிரோ ஈப்பு வாகனங்கள் ) வாங்கி கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மூன்று வாகனங்கள் (1-ஸ்கார்பியோ 2- பொலிரோ ) மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. எனவே இத்தேர்வு நிலை நகராட்சிக்கு நகர் மன்றத் தலைவர் மற்றும் ஆணையாளருக்கு ஸ்கார்பியோ வாகனம் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நகர்மன்ற தலைவருக்கு ஸ்கார்பியோ வாகனம் ஏற்கனவே வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, இந்நகராட்சிக்கு ஆணையாளர் அலுவலக பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ வாகனம் ஒன்று மட்டும் E- Market (GEM RATE) விலையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்குவதற்கு அனுமதி வழங்ககோரி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் அதற்கான செலவினம் ரூ. 18,00,000/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். 686 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 35 :** பெரம்பலூர் நகராட்சியில் 6 மேல்நிலை நீர்நிலை தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டும். குடிநீரில் திரவகுளோரின் செலுத்தப்பட்டும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. திரவகுளோரின் இருப்பு வைக்கவும் குழாயில் பொருத்தப்படவுள்ள குடிநீர் அளவுமானியின் அளவினை கண்காணிக்கவும் துறையூர் ரோட்டில் சாலை ஓரத்தில் ஒரு அறை கட்டுதல் பணி செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்டுள்ளவாறு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 10.80 இலட்சத்திற்கு அனுமதிக்கும், வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 2202/2024/இ1** | தீர்மான எண். 687 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 36 :** 2024-2025- ம் நிதியாண்டில் பெரம்பலூர் நகராட்சிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கை நடத்திட வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர கட்டணம் ஆகியவைகளுக்கான தோராய செலவினம் ரூ.1,00,000/-த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண். 688 அனுமதிக் கப்பட்டது |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2050/2024 /சி1**

**27.06.2024**

பொருள் 37 : இந்நகராட்சியில் நடைபெற்று முடிந்த மற்றும் நடைபெற்று வரும் முன்னேற்ற பணிகளுக்கு மூன்றாம் நபர் தரக்கட்டுபாடு ஆய்வு செய்து அறிக்கை சான்றுடன் பணிமுடிவறிக்கை மற்றும் பயனீட்டு சான்று ஆகியவற்றினை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே 10% இறுதி ஒதுக்கீட்டு தொகையினை பெறுவதற்கு அனுமதிக்கப்படும் எனவும் அதற்கான முழு வடிவிலான அறிக்கையினை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20543/2021/தி1, நாள்:19.05.2023–ன்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி மேம்பாட்டு கழகம் (TUFIDCO) நிறுவனத்தின் ந.க.எண்.TUFIDCO/AMRUT2.0/M(M)/2022,நாள்.25/01/2023–ம் தேதிய கடிதத்தில் KNMT/SRP/NSMT ஆகிய திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு (Third Party Quality monitors) மூன்றாம் நபர் ஆய்வு நிறுவனமாக சத்தியபாமா அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பல்கலைகழகம் சென்னை என்ற நிறுவனத்தை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிறுவனத்தின் மூலம் மூன்றாம் நபர் ஆய்வு செய்து கீழ்கண்டுள்ள பணிகளுக்கு அறிக்கை பெற வேண்டியுள்ளது.

| வ. எ ண் | திட்டத்தி ன் பெயர் / ஆண்டு | பணியின் விபரம் | திட்டமதிப்பீட்டு தொகை. |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022 | அறிவுசார் மையக் கட்டிடம் கட்டுமான பணி | ரூ.115.00 இலட்சம் |
| 2 | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021–2022 | சாலை பணிகள் | ரூ.79.38 இலட்சம் |
| 3 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–2023 | சாலை பணிகள் | ரூ.167.00 இலட்சம் |
| 4 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2023–2024 | சாலை பணிகள் | ரூ.178.00 இலட்சம் |
| 5 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2024 – 2025 | சாலை பணிகள் | ரூ.465.00 லட்சம் |
| 6 | கலைஞர் நகர்புற மேம்பட்டு திட்டம் 2024–2025 | சாலை பணிகள் | ரூ.268.00 லட்சம் |
| | | கூடுதல் | ரூ.1272.38 லட்சம் |

மேற்படி பணிகளுக்கு மூன்றாம் நபர் ஆய்வு அறிக்கை பெறுவதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஆய்வு கட்டணமாக மதிப்பீட்டு தொகையில் 0.5% வீதம் ரூ.6.40 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.189/2024/இ1**

தீர்மான எண். 689 அனுமதிக் கப்பட்டது

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 38 :** நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் மற்றும் அரசு தலைமை மருத்துவமனையில் இயங்கிவரும் அம்மா உணவகங்களுக்கு **01.04.2024** முதல் **31.03.2025** வரை தேவைப்படும் மளிகை பொருட்கள், காய்கறிகள், எரிபொருள், பால் , அரிசி , சுய உதவி குழு ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ள **01.04.2024** முதல் **31.03.2025** வரை உத்தேச செலவினம் **ரூ.95,00,000/- இலட்சத்தை (ரூபாய் தொண்ணுற்று ஐந்து இலட்சம்** மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க. எண் 24/2021/ அ2** | தீர்மான எண். **690** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 39 :** இந்நகராட்சிக்குட்பட்ட **1** முதல் **21** வார்டு பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய், உப்பு தண்ணீர் குழாய் மற்றும் கேட்வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர் செய்யும் பணிக்கு ரூ. 4.95/-இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மான எண். **691** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 40 :** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **8** சிலோன் காலணி பகுதியில் பழைய ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் சிக்கிக் கொண்டதால் புதிய ஆழ்துளை கிணறு, மின் மோட்டார் பொருத்துதல் மற்றும் பைப்லைன் அமைக்கும் பணிக்கு ரூ. 2.00/-இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மான எண்.**692** அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **27.06.2024** | **பொருள் 41 :** பெரம்பலூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை வெளிக்கொணர்வு முகமை (OUT SOURCING) மூலம் பணிகள் மேற்கொண்டுவரும் திருமதி. எஸ்.ஜெயந்தி, ஒப்பந்ததாரர் ஒப்பந்தபணி காலம் 14.05.2024 ம் தேதி அன்று நிறைவு பெற்றுள்ளது. இந்நிலையில் மேலும் ஓராண்டு காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தபணியினை நீட்டிப்பு செய்ய 12.04.2024 அன்று மனு அளித்துள்ளார். இதனடிப்படையில் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலர் அவர்களின் அறிக்கையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 35295/2022/EA2-SWM-15 நாள்.10.01.2021ல் இணைக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறை எண்7ல் குறிப்பிடப்பட்டுள்ளப்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டுவரும் திருமதி. எஸ். ஜெயந்தி ஒப்பந்ததாரர், ஓராண்டு காலம் நல்லமுறையில் பணிசெய்துள்ளதால் தற்சமயம் பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததாலும், நகர்மன்ற கூட்டம் நடத்துவதற்கு அனுமதி இல்லாமல் இருந்ததாலும், நகர்மன்ற கூட்டம் நடத்துவதற்கு மூன்று மாத காலம் ஆகும் என தெரிவித்துள்ளதாலும், தற்போது உள்ள ஒப்பந்த மதிப்பீட்டு தொகையிலேயே 15.05.2024 முதல் 14.08.2024 வரையிலான மூன்று மாத காலங்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டு ஒப்பந்த நெறிமுறைகளை பின்பற்றி பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,00,000/– பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:-**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் 15.05.2024 முதல் நடைபெறுவதையும் அதற்கான மூன்று மாத ஊதியம் வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 5600/2023/H1** | தீர்மான எண். 693 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 42 :** பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும் வழியில் உள்ள தனிநபர் காலி இடத்தில் ஜெமினி சர்க்கஸ் நடத்துவதற்கு 21.06.2024 முதல் 15.07.2024 வரை 25 நாட்களுக்கு மேலாளர், ஜெமினி சர்க்கஸ் என்பவரின் 18.06.2024–ம் தேதிய விண்ணப்பத்தில் அனுமதி வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி தனிநபர் காலி இடத்தில் சர்க்கஸ் நடத்த அரசு விதிகளுக்குட்பட்டும் எவ்வித இடையூரும் இல்லாமல் நடத்துவதற்கும் கீழ்கண்டுள்ளவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு அனுமதி வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுறது.<br>**கட்டண விபரம்** :<br>1) PPR சட்டப்படி – ரூ.6000/-<br>2) D & O Trade Licence _ ரூ.1000/-<br>**அலுவலகக்குறிப்பு** :<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.2275/2024/v¥.1** | தீர்மான எண். 694 அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 43 :** இந்நகராட்சியில் பழைய பேருந்து நிலையம் அருகில் 1997 ஆம் ஆண்டு ஒரு இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் அந்த மேல் நிலை நீர்தேக்க தொட்டி மிகவும் பழுதுதடைந்து இடிந்து விழும் அபாயநிலையில் உள்ளது. இதனால் அம்மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் தாங்கு திறனை அண்ணா பல்கலைகழகம் அரியலூர் | தீர்மான எண். 695 அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பேராசிரியரால் ஆய்வு செய்யப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டி தாங்கும் திறன் இழந்து விட்டது எனவே, இதனை இடித்து அப்புறப்படுத்தலாம் என அறிக்கை வழங்கியுள்ளார்கள்.<br><br>மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் பெரம்பலூர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு ஆலோசனை கூட்டத்திலும் இம்மேல்நிலை தொட்டியை இடித்து அப்புறப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மேல் நிலை நீர்தேக்க தொட்டியினை இடித்து அப்புறப்படுத்துவதற்கும் சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>மேலும் இத்தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/– இச்செலவினத்திற்கு அனுமதியும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக்குறிப்பு** :<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| **27.06.2024** | **பொருள் 44 :** இந்நகராட்சியில் NSMT 2022-2023, 2023-2024 மற்றும் 2024-2025 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் 22.720 கி.மீ நிளத்திற்கு 117 எண்ணிக்கை சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.அச்சாலைகளில் சுமார் **240** இடங்களில் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சாலைகளில் இரவு நேரங்களில் பயணிக்கும் போது வேகத்தடைகள் இருப்பதை அறியாமல் வேகமாக சென்று விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, வேகத்தடைகளுக்கான வெள்ளை நிற சாலைக் கோடுகள் (Thermo plast) அடிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.12,30,000/- க்கு அனுமதிக்கும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். **696** அனுமதிக் கப்பட்டது |
| **27.06.2024** | **பொருள் 45 :** இந்நகராட்சியில் உள்ள அடிப்படை கட்டமைப்புகள் சாலைகள், கால்வாய்கள், சிறுபாலங்கள், தெருவிளக்குகள், பாதாள சாக்கடை , ஆள்இறங்கும் தொட்டிகள் (Man hole ) குடிநீர் குழாய் வாழ்வுகள், நில அமைப்புகள், (மேடு பள்ளங்கள்) சாலைகளின் நீளம் மற்றும் அகலம் போன்ற தகவல்கள் இதுவரை நகராட்சியில் சேகரம் செய்யப்படாமல் உள்ளது. இவை அனைத்தையும் தகவல்கள் மற்றும் புவியியல் வட, தென்புற அச்சு கோடுகளோடு இணைத்து அளவீடு செய்து, இதில் கிடைக்கப்பெறும் தகவல்களை கொண்டு வருங்காலங்களில் நகராட்சிக்கு தேவையான திட்டங்கள் தயாரிக்க உபயோகப்படுத்தப்பட உள்ளதால், நகரில் அமைந்துள்ள 198.933 கி.மீ சாலைகளையும் அளவீடு செய்து நகரின் முழு அமைப்பு அறிக்கை தயாரிக்க ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.11,00,000/– க்கு அனுமதிக்கும் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண். **697** அனுமதிக் கப்பட்டது |

//ஒம்//திருமதி.மா.அம்பிகா
நகர்மன்றதலைவர்
பெரம்பலூர் நகராட்சி

**// உண்மை நகல்//**

ஆணையாளர்
பெரம்பலூர் நகராட்சி